பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 11 2026 THURSDAY - 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகிறார்.

2. மாநிலங்களின் சுரங்கத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் இரண்டு நாள் மாநாடு, கோவாவில் இன்று தொடங்கியது.

3. காசி தமிழ் சங்கமத்திற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம் வாரணாசியில் நடைபெற்றது.

4. ஈரானுடனான போரே, தேர்தல் பின்னடைவுக்கு காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் Tanvi Patri இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

>>>>>><<<<<<

ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகிறார்.

ஜப்பானில் நடைபெற்ற இப்போட்டிகளில் இந்தியா 30 தங்கம், 35 வெள்ளி, 49 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

விளையாட்டுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற வேண்டுமென்றால், அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, இந்தியாவில் கூடுதல் நேரம் செலவிட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்தியாவுக்கு எதிராக செயல்படுவோரை சந்திப்பதை நிறுத்திக் கொள்வது உள்ளிட்ட 7 நிபந்தனைகளை திரு. ராகுல் காந்தி பின்பற்றினால் மட்டுமே வெற்றி கிடைக்க வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தம்மோடு விவாதிக்க தயாரா என்று திரு. ராகுல் காந்தி எழுப்பிய வினாவிற்கு பதிலளிக்கும் வகையில், திரு. கிரண் ரிஜிஜு இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

>>>>>><<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து பிரதமர்களுடன் பேச்சு நடத்தினார்.

அரசுமுறைப் பயணமாக கனடா சென்றுள்ள அவர், St. Johns-ல் நடைபெற்ற இந்த பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து, இந்த பேச்சுக்களின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

சுரங்கத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் இரண்டு நாள் மாநாடு, கோவாவில் இன்று தொடங்கியது.

மாநிலங்களின் சுரங்கத்துறை அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

சுரங்கத்துறையின் வளர்ச்சிக்கான அம்சங்கள் குறித்து இந்த இரண்டு நாள் மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தின் கீழ், கால்நடை பாதுகாப்பிற்கான உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக ஊரக மேம்பாட்டுத்துறை, மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளது.

கால்நடை தீவனங்கள் போதிய அளவு இருப்பதை உறுதி செய்வது, மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் ஊரக பகுதிகளைச் சேர்ந்த பெண் தொழில் முனைவோர்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான தேசிய விற்பனை கண்காட்சி நடத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

முதல்முறையாக தில்லிக்கு வெளியே விஜயவாடாவில் நடைபெற்ற விற்பனை கண்காட்சியில், 12 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனையானதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் கைவினைப் பொருட்களின் விற்பனை மட்டும் 75 சதவீதமாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் விற்பனை மதிப்பு, ஒரு கோடியே 90 லட்சம் ரூபாயாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் இதில் பங்கேற்றதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

காசி தமிழ் சங்கமத்திற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம் வாரணாசியில் நடைபெற்றது.

பனாரஸ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், போக்குவரத்து மற்றும் தங்கும் வசதிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கண்காட்சிகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் குறித்தும் இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசி தமிழ் சங்கமம் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 12ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

ராஜஸ்தானில் மூன்றாம் கட்ட உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

27 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 11 ஆயிரத்து 869 வாக்குச்சாவடிகளில், காலை 7 மணிக்கு தொடங்கிய இந்த வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

மஹராஷ்ட்ராவில் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று துணை முதலமைச்சர் திருமதி. Sunetra Pawar கூறியுள்ளார்.

புனே மாவட்டம், Chakan-ல் கூட்டுறவு வங்கியை திறந்து வைத்து அவர் பேசினார்.

விவசாயிகளுக்கு உரிய கடனுதவி கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தடையற்ற மின்சாரம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று திருமதி. Sunetra Pawar கூறினார்.

>>>>>><<<<<<

கேரளத்தில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு இயக்கத்தில் 30 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சர் திரு. ரமேஷ் சென்னிதாலா கூறியுள்ளார்.

பாலக்காட்டில் நடைபெற்ற போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்டில் நிலக்கரி சுரங்கத்தில் நேரிட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர், 3 பேர் காயமடைந்தனர்.

Bokaro மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் செயல்பட்டு வந்த நிலக்கரி சுரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த நிலக்கரி சரிந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

மணிப்பூரில், இரண்டு தீவிரவாத அமைப்புகளுக்கு இடையே நேரிட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து, Noney மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்பு படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

500-க்கும் மேற்பட்டோர் அப்பகுதியில் முகாமிட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 3 பேர் காயமடைந்தனர்.

Saharanpur மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த கார், லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

யுக்ரைன் - ரஷ்யா இடையேயான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முத்தரப்பு பேச்சுகள் அபுதாபியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 10 மற்றும் 11ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள இந்த பேச்சுகளில் அமெரிக்காவும் பங்கேற்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்கால தேர்தலில் குடியரசு கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு, ஈரானுடனான போரே காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதாக அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த போர் காரணமாக ஏற்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு, வாக்காளர்களர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியதாக கூறினார்.

>>>>><<<<<

இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் Tanvi Patri இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

செனகலின் Dakar-ல் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-14, 11-21, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Yuzuno Watanabe-வை வென்றார்.

இப்போட்டிகளின் மகளிர் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறும் முதலாவது இந்தியர் என்ற சாதனையையும் Tanvi Patri படைத்துள்ளார்.

>>>>><<<<<

உலக ரேபிட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஐக்கிய அரபு எமிரேட்டின் Al-Ain-ல் நடைபெற்ற இப்போட்டியில் 7 புள்ளிகளுடன் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

மொஹாலியில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishanavi Adkar - Rutuja Bhosale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Madeleine - Amelia Rajecki இணையை வென்றது.

>>>>><<<<<

தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டி, டாக்காவில் இன்று தொடங்குகிறது.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள முதல் போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு எதிரான 17 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது மற்றும் இறுதி நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி, Al-Amerat-ல் இன்று தொடங்கியது.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உட்பட 8 நாடுகள் இதில் பங்கேற்றுள்ளன.

>>>>>END<<<<<